தனிப் பிரதி ரூ. 10/–
ஆண்டுச் சந்தா ரூ. 100/–
ஆயுள் சந்தா ரூ. 1000/–


# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 11 இதழ் : 9 ஜூலை – 2015

**அவன் (ஆபிரகாம்) ஒருவனாயிருக்கையில்**
**நான் (கர்த்தர்) அவனை அழைத்து,**
**அவனை ஆசீர்வதித்து,**
**அவனைப் பெருகப்பண்ணினேன்.**

ஏசாயா : 51 : 2



ஆசிரியர். பேராயர். வே. தேவதாஸ்

# ஷாலோம் செயற்குழு கூட்டம்

## 01.06.2015 - நாலுமாவடி





ஷாலோம் ஊழியங்களுக்காகவும் 25வது வெள்ளி விழா ஆண்டு திட்டங்களுக்காகவும்
சிறப்பு ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது



பணித்தள அறிக்கை - சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள்



ஊழிய அறிக்கை & எதிர்கால திட்டம் -
பேராயர். வே. தேவதாஸ் அவர்கள்



ஆலோசனை & தேவ செய்தி - சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள்



சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களுக்காகவும்,
இயேசு விடுவிக்கிறார் ஊழியங்களுக்காகவும் சிறப்பு ஜெபம்





கூடுகையில் கலந்து கொண்ட செயற்குழு உறுப்பினர்களின் குழு கலந்துரையாடல்

## உங்கள் சகோதரனிடமிருந்து



**கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!**

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய கிருபையாலும் உங்கள் யாவரின் ஜெபங்களினாலும் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் தேவன் எங்களுக்குத் தந்த தரிசன பணியான ஷாலோம் ஊழியங்கள் சிறப்பாக வளர்ந்து வருகிறது. மேலும் தேவனுடைய மேலான கிருபையினால் 01.07.2015 முதல் 25ம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறோம்.

கடந்த 24 ஆண்டுகளில் பீல் மக்களுக்கு சுவிசேஷம் அறிவித்து பாவம், சாபம், நோய்கள், பிசாசின் கட்டுகள் ஆகியவற்றிலிருந்து அவர்களை விடுவித்து, அப்படி இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளிலிருந்து 580 பேரை முழு நேர ஊழியர்களாக தேர்ந்தெடுத்து அவர்களை பயிற்றுவித்து, அவர்கள் மூலம் 620 கிராம சபைகளை ஸ்தாபிக்க தேவன் கிருபை தந்துள்ளார். இதுவரை கிருபையால் 303 கிராம ஆலயங்கள் கட்டியெழுப்பப்படவும், 20 ஆயிரத்திற்கும் அதிகமான பீல் ஆதிவாசி குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்து வருகிறார். தேவன் தந்த ஆத்துமாக்களுக்காக, சபைகளுக்காக அற்புத அடையாளங்களுக்காக, பாதுகாவல் பராமரிப்பிற்காக தேவனைத் துதிக்கிறோம்.

இப்பவும் **"இந்த வெள்ளிவிழா ஆண்டில் 1000 சுதேச ஊழியர்கள் எழுப்பப்படவும், 1000 கிராம சபைகள் உருவாகவும், 500 கிராம ஆலயங்கள் கட்டியெழுப்பப்படவும் குறைந்தது 1 இலட்சம் பீல் குடும்பங்களை தேவனண்டை வழி நடத்தவும் அர்ப்பணித்து ஜெபித்து உழைத்து வருகிறோம்."** நீங்கள் யாவரும் தொடர்ந்து ஜெபித்து தாங்க அன்புடன் அழைக்கிறோம். மட்டுமல்லாமல் இந்த வருடத் திட்டங்களை நிறைவேற்ற குறைந்தது 2 புதிய ஷாலோம் ஆதரவாளர்களை அறிமுகம் செய்ய அன்புடன் கேட்கிறேன். மேலும் உங்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு ஷாலோம் ஊழியத்தை அறிமுகம் செய்ய கேட்கிறேன். அடுத்த மாத இதழை **"வெள்ளி விழா ஆண்டு சிறப்பு ஆயத்த மலராக"** வெளியிடுகிறோம். உங்கள் யாவருக்காகவும் நாங்கள் ஜெபித்து வருகிறோம்.

**"நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன்...."** எபி. 6 : 14 – இந்த வசனத்தின்படி தேவன்தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக!

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் **V.** தேவதாஸ்)

என்னுடன் தொடர்பு கொள்ள : 09377445468 (குஜராத்)

# <u>ஆபிரகாமை அழைத்த தேவன்</u>

சிறப்புச் செய்தி : பேராயர். **வே. தேவதாஸ்**

**“உங்கள் தகப்பனாகிய ஆபிரகாமையும், உங்களைப் பெற்ற சாராளையும் நோக்கிப் பாருங்கள்; அவன் ஒருவனாயிருக்கையில் நான் அவனை அழைத்து, அவனை ஆசீர்வதித்து, அவனைப் பெருகப்பண்ணினேன்”. ஏசாயா 51:2**

கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே, தேவன் அழைத்த நம் முற்பிதாவாகிய ஆபிரகாம் குடும்பத்தின் மூலமாக பிதாவாகிய தேவன் இந்த பூமியில் உள்ள வம்சங்களையெல்லாம் ஆசீர்வதிக்க சித்தம் கொண்டார். ஆபிரகாமை தெரிந்துக் கொண்ட நோக்கமே சபிக்கப்பட்ட பூமியை; மனுக்குலத்தை மீட்கும்படியாகவும்; தம் ஆசீர்வாதத்தினாலும் நிரப்புவதற்காகத்தான். **“பூமியில் உள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்”.** ஆதி. 12:3 (b) மற்றும் ஆதி. 22:18, ஆதி. 26:5 வசனங்கள் மூலமாக வெளிப்படுத்துகிறார்.

**“அந்தப்படி விசுவாசமார்க்கத்தார் விசுவாசமுள்ளஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்”.** கலாத். 3:9 **“ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று”.** கலாத் 3:14 **“நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்”.** கலாத். 3:29 மேற்கண்ட வசனங்கள் மூலமாக பூமியில் உள்ள புறஜாதிகள் அனைவரும் கிறிஸ்து இயேசுவின் மூலமாக, கிறிஸ்துவை விசுவாசிப்பதின் மூலமாக ஆபிரகாமின் சந்ததியாக ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். இரட்சிப்பையும்; பரிசுத்த ஆவியையும், நித்திய ஜீவனையும் ஆபிரகாமின் ஆசீர்வாதமாக சபைக்கு சபை விசுவாசிகளுக்கு தேவன் தந்துள்ளார். விசுவாசிகளாகிய நாமும்; சபையும் ஆசீர்வதிக்கப்படும் நோக்கம் நமக்கு மட்டுமல்ல பூமியிலுள்ள அனைத்து வம்சங்களும்; தேசங்களும் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் மூலமாக ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. தேவன் ஆபிரகாமிற்கு தந்த ஆசீர்வாதத்தை சற்று தியானிப்போம்.

**அழைப்பும் கிருபையும் :–**

ஆபிரகாம் ஒருவனாக இருக்கையில் சர்வ வல்லமையுள்ள தேவன் அழைக்கிறார். அவர்தான் முதல் விசுவாசியாக அழைக்கப்பட்டார். எதை ஆதாரமாக வைத்து தேவன் அழைத்தார் என்று பார்த்தால் எவ்விதமான அழைப்பிற்கேற்ற தகுதியில்லை.

**“...பூர்வத்திலே உங்கள் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் நாகோருக்கும் தகப்பனான தேராகு என்பவன் நதிக்கு அப்புறத்திலே குடியிருந்தபோது அவர்கள் வேறே தேவர்களைச் சேவித்தார்கள். நான் நதிக்கு அப்புறத்தில் இருந்த உங்கள் தகப்பனாகிய ஆபிரகாமை அழைத்துக்கொண்டுவந்து, அவனைக் கானான்தேசமெங்கும் சஞ்சரிக்கச்செய்து, அவன் சந்ததியைத் திரட்சியாக்கி, அவனுக்கு ஈசாக்கைக் கொடுத்தேன்”.** யோசுவா 24:2,3 வாசித்துப் பாருங்கள். வேறே தேவர்களை சேவித்த

குடும்பத்திலிருந்து ஆபிரகாமை கிருபையாக இரட்சிக்கும்படியாக அழைத்தார். நாமும் கூட அப்படியாகத்தான் இருந்தோம். நாம் அவரை தெரிந்துக் கொள்ளவில்லை. இயேசுவே நம்மை தெரிந்து கொண்டார். **"நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்".** யோவான் 15:16. மேலும் எபேசி. 2:5,8 வாசித்துப் பாருங்கள் அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; **கிருபையினாலே** இரட்சிக்கப்பட்டீர்கள். **கிருபையினாலே** விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. தேவன் நம்மை அழைத்து இரட்சித்து, அபிஷேகித்து நம்மை உலகத்திற்கு ஆசீர்வாதமாக வைத்திருப்பது அவருடைய சுத்த கிருபையே. ஆபிரகாமின் சந்ததியாக, நம்மை கிருபையாக கிறிஸ்து இயேசுவுக்குள் அழைத்த பிதாவாகிய தேவனின் கிருபைக்காக தேவனைத் துதிப்போம். தேவனுடைய கிருபையும். அவர் நம்மை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே ஆமென்.

நான் என் வாலிபப்பிராயத்தில் 36 வருடங்களுக்கு முன் உலகத்தில் தனிமையாக்கப்பட்டு பாவங்கள், சாபங்கள் நோய்கள் என பிடிக்கப்பட்டு தேவனை விட்டு தூரமாக இருந்தேன். இவ்வுலகில் அன்பு, சமாதானம் கிடைக்கப்பெறாமல் தற்கொலை செய்து கொள்ள விஷம் அருந்தினேன் ஆகிலும் தேவன் கிருபையாக ஜீவனை விட்டு வைத்தார்.19ம் வயதில் கோவை பட்டிணத்தில் அப்போஸ்தல ஜெபவீடு என்ற சிறிய சபையில் கலந்துக் கொண்ட அந்நாளில் உலகத்தில் உள்ள எல்லா அன்பை விட இயேசுவின் அன்புதான் மாறாதது என்று வார்த்தைகள் மூலமாக பேசினார். ஆபிரகாமே என்று அழைத்த தேவன், என்னையும் கிருபையாக சபை ஆராதனையில் தேவன் என் பேரை சொல்லி அழைத்தார். இரட்சித்து அபிஷேகித்து உன்னை ஒரு ஜாதி மக்களுக்கு ஆசீர்வாதமாக வைப்பேன் என்று திருவுளம் பற்றினார். இன்று பீல் ஆதிவாசி மக்களுக்கு ஆசீர்வாதமாக எங்கள் குடும்பத்தை பயன்படுத்தி வருகிறார். **தேவன் எங்களை அழைத்த கிருபைக்காக திரியேக தேவனை துதிக்கிறோம்.**

**விசுவாசமும், ஆசீர்வாதங்களும் :–**

தேவன் ஆபிரகாமை கிருபையாக அழைத்த போது அவர் கீழ்ப்படிந்தார். தேவன் சொன்னபடி ஒவ்வொரு நியமங்களையும் கற்பனைகளையும், விதிகளையும் கைக்கொண்டு அதன்படி நடந்தார். அதுமட்டுமல்ல அவைகளின்படி நடக்கும்படியாக தேவனை விசுவாசித்தார். இந்த நாட்களைப் போல் விசுவாசிப்பதற்கு அநேக சாட்சிகள், சபைகள், விசுவாசிகள், ஜெபஉதவிகள், பத்திரிகைகள், வீடியோ, ஆடியோ சாதனங்கள், டி.வி. மூலமாக செய்திகள் என எதுவும் இல்லாதபோதும் ஒருவனாக அழைக்கப்பட்ட போது விசுவாசித்து பின் சென்றான். **"அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்".** ஆதி. 15:6

ரோமர் 4:17ன்படி ஆபிரகாமின் விசுவாசம் இல்லாதவைகளை இருக்கிறவைகள் போல் அழைக்கிற கர்த்தர் எனவும்; மரித்து போன, நம்பிக்கையற்ற சூழ்நிலைகளை உயிர்ப்பிக்கிற வல்லமை உள்ள தேவன் என்று விசுவாசித்தான். தான் நூறுவயதுள்ள சரீரம் செத்துப்போனதையும், தன் மனைவி சாராள் கர்ப்பம் தரிக்க அவள் கர்ப்பமும் செத்துப்போனது என்பதை **எண்ணாமல்** உயிர்ப்பிக்க வல்லமையுள்ள தேவனை விசுவாசித்தான்.

அதன் விளைவாக ஈசாக்கை பெற்றெடுத்தான். ஈசாக்கின் மூலமாக சந்ததி பலுகி பெருகியது. மட்டுமல்லாமல் தேவன் ஆபிரகாமை எப்படி ஆசீர்வதித்தார் என்பதை ஆதியாகமம் 24:35ல் வாசித்துப் பாருங்கள். கர்த்தர் என் எஜமானை மிகவும் ஆசீர்வதித்திருக்கிறார், அவர் சீமானாயிருக்கிறார்; கர்த்தர் அவருக்கு ஆடுமாடுகளையும், வெள்ளியையும், பொன்னையும், வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொடுத்திருக்கிறார். மேலும் ஈசாக்கையும் தேவன் எப்படி ஆசீர்வதித்தார் என்பதை பாருங்கள் **"ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதை விதைத்தான்; கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறு மடங்கு பலன் அடைந்தான்"**. ஆதி. 26:12ல் **"இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம்"**. எண். 24:1 வசனத்தின்படி தேவனும் நம் ஒவ்வொரு குடும்பத்தையும், நம் சந்ததியையும் ஆசீர்வதிப்பதில் தேவன் பிரியமாயிருக்கிறார். நம்மை கனவான்களாக மாற்றும்படியாக தேவன் நமக்காக இயேசுகிறிஸ்துவை கல்வாரி சிலுவையில் நம் சாபங்களையும், தரித்திரங்களையும் சுமக்க வைத்து நம்மை ஆசீர்வதித்துள்ளார் என்பதை விசுவாசித்து பெற்றுக் கொள்வோம். நம்முடைய வாழ்க்கையில் இல்லாமையையும், நம்பிக்கையற்ற சூழ்நிலைகளை எண்ணாமல் கல்வாரி சிலுவையில் கிறிஸ்துவையே நோக்கிப் பார்த்து ஆசீர்வாதங்களை விசுவாசத்துடன் பெற்றுக் கொள்வோம்.

நானும், என் மனைவியும் மிகவும் எளிய குடும்ப சூழ்நிலையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு ஊழிய அழைப்பைப் பெற்று தேவனால் 30 வருடங்களுக்கு முன் (08.07.1985) திருமண வாழ்வில் இணைக்கப்பட்டோம். பீல் மக்கள் தரிசனத்தை திருமணமான முதல் வாரத்தில் தந்து இவர்களுக்கு நீங்கள் ஆசீர்வாதமாக இருப்பீர்கள், இந்த ஆதிவாசி மக்களைத்தான் நான் உங்களுக்கு தருவேன் என திருவுளம் பற்றினார்.

எளிய குடும்பமான எங்களை 1990ம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து அழைத்து சென்றார். ஆரம்ப நாட்களில் (ஜுலை 1ம் தேதி) **சகோ. மோகன் சி.லாசரஸ்** அவர்கள் இயேசு விடுவிக்கிறார் மூலம் ஜெபித்து தாங்க முன்வந்த போது மாதந்தோறும் மிஷனரி காணிக்கை அனுப்ப முகவரி கேட்டார்கள். அப்போது எங்களிடம் விலாசமும் இல்லை. குஜராத் பணித்தளத்திற்கு சென்ற பின்பு அனுப்புகிறேன் என்று சொன்ன போது எங்களை வியப்புடன் பார்த்தார்கள். மூத்த மகன் **டைட்டஸ்** (5 வயது), இரண்டாவது மகன் **ஷாலோம்** (1 வயது) இரண்டு பிள்ளைகளையும் எடுத்துக் கொண்டு எப்படி போய் ஊழியம் செய்வீர்கள் என கேட்டார்கள்?

பணித்தளத்தில் 1991 ஜுலை மாதம் ரூ. 650 வாடகைக்கு கிடைத்த பேய் பங்களாவில் பழைய சைக்கிள் ஒன்றைப் பயன்படுத்தி கிராமம் கிராமமாக சுவிசேஷத்தை அறிவித்து ஜெபக்கூட்டம் ஆரம்பித்தோம். 2 ஆதிவாசி குடும்பங்கள் ஜெபிக்க வந்து நோய்கள், பிசாசின் பிடியிலிருந்து விடுதலைப் பெற்றார்கள். தொடர்ந்து 20, 30, 100, 200 என கூடிவந்து அற்புதங்களை பெற்றார்கள். தேவன் தந்த தரிசனப்படி பீல்சுதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தந்தார். இன்றுஇதுவரை 580 சுதேச ஊழியர்களை எழுப்பவும் அவர்கள் மூலமாக ஆயிரத்திற்கும் அதிகமான கிராமங்களில் விசுவாசிகளையும், 600க்கும் அதிகமான சபைகளையும் அவற்றில் 258 கிராமங்களில் ஆலயங்கள் கட்டி பிரதிஷ்டை செய்யவும் தேவன் கிருபை தந்துள்ளார்.

1991ல் பேய் பங்களாவில் பழைய சைக்கிளில் ஆரம்பித்த ஊழியத்தை தேவன் பேரில் கொண்ட விசுவாசத்தினிமித்தமாக அழைத்த தேவன் இன்று தேவன் ஷாலோம் ஊழியங்களுக்குச் சொந்தக் கட்டிடங்களையும், வாகனங்களையும், வீடுகளையும் தந்து குறிப்பாக பீல் சுதேச ஊழியர்களையும், மூப்பர் விசுவாசிகளையும் தாராளமாக கொடுக்கும் அளவிற்கு ஆசீர்வதித்துள்ளார். இதை வாசிக்கிற எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே என் வாழ்வில் உள்ள பிரச்சனைகள், கட்டுகள், இல்லாத சூழ்நிலைகளை மாற்றிய தேவன் உங்களை ஆசீர்வதித்து உயர்த்த ஆபிரகாமை போல் விசுவாசியுங்கள். கடுகு அளவு விசுவாசத்தை கனப்படுத்தும் தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

**அர்ப்பணிப்பும், பெருக்கமும் :–**

ஆபிரகாம் வாழ்வில் கிருபையும், அழைப்பும்; விசுவாசமும் ஆசீர்வாதமும் என்ற தலைப்பிலே தியானித்தோம். ஆனால் அழைத்த தேவன் பெருக்கமான ஆசீர்வாதத்தைக் கொடுக்கவும், ஜாதிகளுக்கு ஆசீர்வாதமாக உருவாக்கவும் தேவன் அர்ப்பணிப்பையும், ஒப்புக் கொடுத்தலையும் ஆபிரகாமிலிருந்து எதிர்பார்த்தார்.

ஆதி 22ம்அதிகாரத்தில் ஆபிரகாமை தேவன் சோதித்தார். தன் புத்திரனும், ஏக சுதனும் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை மோரிபா தேசத்தில் இருக்கும் மலையில் தகனபலியாக பலியிட ஆயத்தமா? என்று கேட்டபோது தன்னையும் தனக்குள்ள யாவையுமே தன்னை அழைத்த தேவனுக்கு அர்ப்பணிக்கிறார். தேவனை விசுவாசித்தது மட்டுமல்ல தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருக்காக தன் குமாரன் ஈசாக்கை ஒப்புக் கொடுக்க அர்ப்பணிக்க முன்வந்தார்.

**“நீ உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக் கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால்”** (ஆதி. 22:16) ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கை ஒப்புக் கொடுத்தபடியால் தேவன் எப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களை ஆசீர்வாதமாக கட்டளையிட்டார் என்பதை பாருங்கள்.

**<u>ஆதியாகமம் 22 : 17,18</u>**

- நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து,
- உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும்,கடற்கரை மணலைப் போலவும் பெருகவே பெருகப் பண்ணுவேன்
- உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்
- நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்
- என் பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்

பீல் ஆதிவாசி மக்கள் பணிகளின் திரளான தேவைகளுக்கு **விதையாக** கொடுத்து விடுவோம் என ஒருமனமாக இருவரும் பேசினோம். அந்தப் பணத்தை “Sharing Love Mission” பெயருக்கே என எழுதி அர்ப்பணித்தோம்.

அந்த வருட முதல் ஊழியத்தில் எழுப்புதலை கண்டோம் ஆத்துமாக்கள் பெருகியது. அபிஷேகத்தின் வல்லமை பெருகியது. அற்புத அடையாளங்கள் பெருகியது. சுதேச ஊழியர்களும் பெருகினார்கள். தேவன் இலட்சத்துக்கும் அதிகமான ஆத்துமாக்களை பீல் மக்கள் மத்தியில் தந்து வருகிறார். மட்டுமல்ல **"உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன்."** எபி. 6:14ன்படி ஆசீர்வதித்து பெருகப்பண்ணி வருகிறார். மட்டுமல்ல எங்கள் மூன்று பிள்ளைகள் டைட்டஸ், ஷாலோம், ஷெக்கினாவை கர்த்தரே வளர்த்து ஆசீர்வதித்து அடுத்த சந்ததியைக் காண மருமகள் மெர்லின், பேரப்பிள்ளை Zion Kryston காண கிருபை தந்துள்ளார். தேவனுக்காக நாங்கள் அர்ப்பணித்த, ஒப்புக்கொடுத்த எங்கள் நேரம், தாலந்துகள், பணம் எல்லாவற்றையும் ஆயிரமடங்காக தேவன் ஆசீர்வதித்துள்ளார்.

எக்கன்பானவர்களே தேவனுக்காக தேவன் கொடுத்த தேவனிடமிருந்து பெற்றுக் கொண்ட நன்மைகளை (Time, Talent, Treasure) குடும்பத்தின் பிள்ளைகளை ஒப்புக் கொடுக்கும் போது தேவன் உங்களையும், சந்ததிகளையும் தேவன் கொடுத்த ஊழியங்களையும் பல மடங்காக ஆசீர்வதிப்பாராக.

**"உன் சந்ததியின் மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின் மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்".** ஏசாயா 44:3 (b)

"உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" ஆதி. 26:5 (b)

இந்த வாக்குத்தத்த ஆசீர்வாதங்களை தேவன் உங்கள் மீது ஊற்றுவாராக. நம்மை கிருபையாக அழைத்த தேவனை துதிப்போம். விசுவாசத்தினால் நம்மை ஆசீர்வதிக்கும் தேவனுக்கு நன்றி சொல்லுவோம். நம்மை ஒப்புக்கொடுத்து அர்ப்பணிப்பதினால் பெருகப்பண்ணி ஜாதிகளுக்கு ஆசீர்வாதமாக மாற்றும் தேவனுக்கு நம்மை அர்ப்பணிப்போம். ஆமென்.

**தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் நடைபெறும்**

## வாக்குத்தத்த உபவாச ஜெபக் கூடுகை

நாள் : **01.07.2015 (புதன்கிழமை)** நேரம் : **காலை 9.15 முதல் 1.00**

தேவச் செய்தி : ***Prof. C.S.* கிறிஸ்டோபர்,** பாளையங்கோட்டை

இடம் : **அன்பு பகிர்வு இயக்கம், தலைமை அலுவலகம்**

New No. 5A/323, Old.No. 5/168, கால்டுவெல் காலனி 3 வது தெரு, தூத்துக்குடி – 628 008.

**தேவ பிள்ளைகள் அனைவரும் குடும்பமாய் கலந்துக் கொண்டு ஷாலோம் ஊழியங்களுக்காகவும் இந்தியத் தேசத்திற்காகவும் ஜெபித்து தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள அன்பாய் அழைக்கிறோம்.**

## ஷாலோம் பங்காளர் கூடுகை – நாகர்கோவில் – 30.05.2015

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் 30.05.2015 அன்று நாகர்கோவில் ஈடன் ஹாலில் வைத்து நமது ஷாலோம் பங்காளர் கூடுகை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் சகோ. செல்வதுரை அவர்கள் பாடல் & ஆராதனை வேளையை நடத்தினார்கள். **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் பணித்தள செய்தியைப் பகிர்ந்து கொண்டார்கள். **பேராயர். வே. தேவதாஸ்** அவர்கள் அப். 1 : 8ம் வசனத்தைக் கொண்டு தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள். ஷாலோம் ஊழியத்தைக் குறித்ததான வீடியோ படக்காட்சி காண்பிக்கப்பட்டது. தேவ நாமம் மகிமைப்பட்டது. இந்தக் கூட்டத்தில் அநேக தேவ பிள்ளைகள் கலந்து கொண்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

---

## ஷாலோம் பீல் சுதேச ஊழியர் பிரதிஷ்டை
## முள்ளன்விளை – 17.05.2015

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் 17.05.2015 அன்று முள்ளன்விளை CSI சகல பரிசுத்தவான்களின் ஆலயத்தில் வைத்து **Rev. A. ஜோசுவா** அவர்கள் தலைமையில் நமது ஷாலோம் சுதேச ஊழியர் **சகோ. தினேஷ் சிங்காடா** (மத்தியப்பிரதேசம்) அவர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். இந்த ஆராதனையில் சகோ. ஆலன் எல்விஸ் அவர்கள் பாடல் & ஆராதனை வேளையை நடத்தினார்கள். இந்த பிரதிஷ்டை ஆராதனையில் சுதேச ஊழியர் தனது சாட்சியை பகிர்ந்து கொள்ள **சகோதரி. எபனேசர்** அவர்கள் மொழியாக்கம் செய்தார்கள். ஷாலோம் ஊழியத்தைக் குறித்ததான வீடியோ படக்காட்சி காண்பிக்கப்பட்டது. **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள்.

சுதேச ஊழியரைத் தாங்க முன் வந்த ஆதரவாளருக்கும், சபையாருக்கும் போதகருக்கும் நன்றி கூறி தேவனைத் துதிக்கிறோம்.

---

## ஷாலோம் ஆதரவாளர்களுக்கு ஓர் அறிவிப்பு

அன்புள்ள ஷாலோம் ஆதரவாளர்களுக்கு, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய 3 மாநிலங்களில் வாழும் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கு உணவு, உடை, உறைவிடத்துடன் கல்வி மற்றும் உயர்கல்வியினை அளித்து அவர்கள் சமுதாயத்தில் முன்னேறப் பாடுபடுவதோடு, பீல் ஆதிவாசி ஜனங்களுக்கு இலவச மருத்துவச் சேவை மற்றும் இதர சமுதாய முன்னேற்றப் பணிகளை நிறைவேற்றிவரும் **Shalom Charity Mission** க்கு அரசாங்கத்திடமிருந்து **"வருமான வரிவிலக்குச் சான்று"** ***(80G)*** **17.07.2013** முதல் கிடைக்கப் பெற்றுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

சமுதாய முன்னேற்றப் பணி, பீல் ஆதிவாசி சிறுவர் முன்னேற்றப்பணி, மற்றும் மருத்துவ பணிக்குக் காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்கள் இந்த வருமான வரிவிலக்கினை கேட்டுப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

# பீல் ஆதிவாசி மாணவர் கல்வித் திட்டம் - 2015

தேவ கிருபையினால் சுமார் 1 கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசிகள் மத்தியில் குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் மாநிலங்களில் கடந்த 24 ஆண்டுகளில் சுமார் 600க்கும் அதிகமான கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்து சபைகளை ஸ்தாபிக்க தேவன் கிருபை செய்துள்ளார். அந்தகாரத்திலும், குடிப்பழக்கத்திலும் பாவப் பிடியிலும் வாழ்ந்துக் கொண்டிருந்த சுமார் 25,000க்கும் அதிகமான குடும்பத்தார் இயேசு கிறிஸ்துவில் புதுவாழ்வு பெற்றுள்ளார்கள். **தேவனுக்கே மகிமையுண்டாவதாக.**

இப்பொழுது இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு பாவம், சாபம், பிசாசு இவைகளிலிருந்து விடுதலைப்பெற்ற விசுவாசக் குடும்பங்கள் தங்கள் பிள்ளைகள் தங்களைப் போல் வாழக்கூடாது, தங்கள் பிள்ளைகள் படித்து சாட்சியுடன் வாழ வேண்டும் என்ற வாஞ்சையுடன் எதிர்நோக்கி இருக்கிறார்கள். ஆகவே நாங்கள் இந்த தேவைகளை கண்டறிந்தவர்களாய் பாரத்துடன் ஒவ்வொரு வருடமும் கல்வியறிவு பணிக்காக நம்மால் முடிந்த உதவிகளை செய்து வருகிறோம்.

கடந்த இரு நூற்றாண்டுகளில் மேல்நாட்டு மிஷனெரிமார்கள் நமக்கு சுவிசேஷ ஒளியைத் தந்து ஆண்டவரண்டை நடத்தி அழகுமிகு ஆலயங்களைக் கட்டிக் கொடுத்தார்கள். இன்று தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியாவில் பல நகரங்களில் அன்று மிஷனெரிமார்களால் கொடுக்கப்பட்ட கிறிஸ்தவ கல்வி நிலையங்கள் மூலமாக மூன்று நான்கு தலை முறையாக நாம் கல்வியறிவைப் பெற்று வருகிறோம். கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல ஒவ்வொரு ஜாதி சமயத்தினரும் கல்வியறிவைப் பெற்றுக் கொள்வதற்கு ஆசீர்வாதமாக இன்றும் அமைந்து வருகிறது. இது நாம் மறுக்க முடியாத உண்மை. இன்றைக்கு கிறிஸ்துவின் அன்பையும், கல்வியறிவையும் பெற்ற நாம் கல்வியறிவில்லாதவர்களுடைய கண்களைத் திறக்க வேண்டியது நம்முடைய கடமையாகும். தேவன் இந்த பீல் மக்களை தெரிந்தெடுத்து அற்புத அடையாளங்களோடு சுதேச ஊழியர்களை தெரிந்தெடுத்து கிராமங்கள் தோறும் சபைகளை தேவன் உருவாக்கி வருகிறார்.

## தற்போது கல்வியறிவு பெற்று வரும் பீல் ஆதிவாசி மாணவர்களின் விபரம்.

| | | |
|---|---|---|
| 1. | அனைத்து சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் | 654 |
| 2. | ஐ.பி. மிஷன் விடுதி ஜாலோத், குஜராத் | 14 |
| 3. | ஷாலோம் விடுதி கோத்ரா, குஜராத் | 6 |
| 4. | மத்தியப்பிரதேசத்தில் ஆதரிக்கப்படும் பிள்ளைகள் | 83 |
| 5. | ஷாலோம் விடுதி கட்வாடா, மத்தியப்பிரதேசம் | 42 |
| 6. | அனைத்து விசுவாசி பிள்ளைகள் | 215 |
| 7. | ஷாலோம் மிஷன் பள்ளி & விடுதி, இராஜஸ்தான் | 204 |
| | மொத்தம் | 1218 |

ஆகவே பின் வரும் திட்டங்களை ஆவியானவருடைய ஒத்தாசையோடு நிறைவேற்ற பிரயாசப்படுகிறோம்.

- தாகோத் (குஜராத்), பான்ஸ்வாடா (இராஜஸ்தான்), ஜாபுவா (மத்தியப்பிரதேசம்) ஆகிய மூன்று மாவட்டங்களிலும் 2015–ஆம் ஆண்டுக்குள் 10 பள்ளிக்கூடங்கள் கட்டி எழுப்பவேண்டும்.
- 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களை பராமரிக்கக்கூடிய 100 ஆதிவாசி மாணவர்கள் விடுதிகளை மூன்று மாநிலங்களிலும் எழுப்ப வேண்டும்.
- 12–ம் வகுப்பு முடித்துவிட்டு உயர்கல்வி மற்றும் தொழில் கல்வி படிக்க முன்வரும் விசுவாசி பிள்ளைகளை முழுமையாக நிதி உதவி கொடுத்து, ஆலோசனைகள் மற்றும் பயிற்சி கொடுத்து தாங்க வேண்டும்.
- இதன் மூலமாக 10 வருடங்களில் இந்த மூன்று ஆதிவாசிகள் நிறைந்த இந்த மாவட்டங்களிலும் குறைந்தது 1000 ஆதிவாசி இளைஞர்கள் தங்கள் சமுதாயத்தில் சிறந்த தலைவர்களாக, அதிகாரிகளாக தொண்டு செய்து தங்கள் மாவட்டங்களை முன்னேற்ற வழி செய்பவர்களாக மாறுவார்கள் என்பது எங்கள் பாரமும் தரிசனமுமாகும்.
- பீல் ஆதிவாசி சிறுவர்கள் கல்வியறிவு பெற்று நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.
- ஒரு பீல் ஆதிவாசி மாணவரை மாதந்தோறும் ரூ. 700/– கொடுத்து ஜெபித்து தாங்கக்கூடிய 216 புதிய ஆதரவாளர்களை எழுப்ப வேண்டும்.

## *2015 கல்வியாண்டின் தேவைகள்*

இந்த 2015ம் ஆண்டு ஜுன் மாதத்தில் மேற்கண்ட மாணவர்களின் பள்ளிக்கான கட்டணம் (School Fees, Dress, Note Books) வாங்குவதற்கு ஒரு மாணவனுக்கு சுமாராக ரூ. 1000/– வீதம் 1218 மாணவர்களுக்கு சராசரியாக **ரூ. 8 இலட்சங்கள்** தேவைப்படுகிறது. உங்கள் குடும்பத்தின் சார்பில் அல்லது சபை, ஜெபக்குழு மூலமாக ஒரு சில மாணவர்களுக்காவது கல்வி உதவி செய்ய முன் வாருங்கள்.

**“மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்.”** (மத்தேயு 25:40) இந்த வசனத்தின்படி பீல் ஆதிவாசி மாணவர்களுக்காக நீங்கள் தியாகத்தோடு கொடுக்கும் நிதி உதவிகளை ஆண்டவர் ஏற்றுக் கொண்டு **“உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்”** (ஏசாயா 54:13) என்ற வசனத்தின்படி கர்த்தர் உங்கள் சந்ததிகளை ஆசீர்வதிப்பாராக. காணிக்கை அனுப்பும்போது உங்கள் பிள்ளைகளுக்கான ஜெபக்குறிப்புகளை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். நாங்களும், ஊழியர்களும் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் ஜெபிக்கிறோம்.

## Sharing Love Mission - செயற்குழு கூட்டம் - 2015

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் **"ஷாலோம் செயற்குழு கூட்டம்" 01.06.2015** அன்று இயேசு விடுவிக்கிறார் நாலுமாவடியில் வைத்து சிறப்பாக நடைபெற்றது. இதன் நிகழ்ச்சிகளை **Prof. C.S. கிறிஸ்டோபர்** அவர்கள் தொகுத்து வழங்கினார்கள். பாடல் மற்றும் ஆராதனை வேளை முடிந்தவுடன் **சகோ. அற்புதராஜ் மர்காஷிஸ்** அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார்கள். அதன்பின் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் கடந்த ஆண்டு பணித்தளங்களில் நடைபெற்ற காரியங்களையும் தேவன் செய்த காரியங்களையும் குறித்து அறிக்கையை அனைவர் முன்னிலையில் வாசித்தார்கள். தேவ நாமம் மகிமைப்பட்டது!

ஷாலோம் கணக்கு மற்றும் நிதி அறிக்கையினை **சகோ. பிரேம்குமார்** அவர்கள் வாசித்தபின் **பிஷப் தேவதாஸ்** அவர்கள் தேவ செய்தியினை வழங்கி, 25வது வருட வெள்ளிவிழா திட்டங்களைக் குறித்து பகிர்ந்து கொண்டார்கள். அதன்பின் ஊழியங்களின் பண தேவைகளைக் குறித்தும், ஊழியப் பணியாளர்கள் தேவையைக் குறித்தும், அலுவலக நிர்வாகம் & சபை ஒருங்கிணைப்பு காரியங்கள் குறித்தும் கலந்து ஆலோசிக்கப்பட்டது. அதன்பின் குழுவாக இணைந்து கலந்தாய்வு செய்யப்பட்டு, ஒரு கோடி பீல் ஆதிவாசி மக்கள் ஆத்தும அறுவடைத் திட்டங்களையும் நிறைவேற்றும்படியாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதன்பின் **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்கள் தகுந்த ஆலோசனைகளைக் கொடுத்து, கர்த்தர் ஷாலோம் ஊழியங்களை ஆயிரம் மடங்கு ஆசீர்வதிக்கப்போவதாக தீர்க்கதரிசனம் கூறி தேவனுடைய வார்த்தையைச் சொல்லி பாரத்தோடு ஜெபித்தார். அதன்பின் **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களுக்காகவும் இயேசு விடுவிக்கிறார் ஊழியங்களுக்காகவும் **பிஷப். தேவதாஸ்** அவர்கள் ஜெபித்தார்கள். கூட்டம் முடிவு ஜெபத்துடன் இனிதே நிறைவுற்றது.

தேவன் தந்த **Sharing Love Mission** செயற்குழு உறுப்பினர்களுக்காக தேவனைத் துதிக்கிறோம். அவர்களையும் அவர்கள் குடும்பத்தையும் தேவன் ஆசீர்வதிக்கவும், அவர்கள் இன்னும் அதிக அர்ப்பணிப்புடனும் உற்சாகத்துடனும் ஷாலோம் ஊழியங்களை ஜெபித்துத் தாங்கவும், ஊழியங்களுக்கு ஆலோசனைகளை வழங்கவும் அவர்களுக்காக ஜெபியுங்கள்.

### பங்கு பெற்ற ஷாலோம் செயற்குழு உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| **Bishop. V. Devadass** | - | Managing Trustee |
| **Bro. Mohan C. Lazarus** | - | Trustee |
| **Prof. C.S.Christopher** | - | Trustee |
| **Mr.Arputharaj Margoschis,** | - | Trustee |
| **Prof. P. George** | - | Trustee |
| **Mr.A. Suthandrasingh** | - | Trustee |
| **Mr. Pandian.A** | - | Trustee |
| **Mr. Roshan** | - | Trustee |
| **Mr. Sundarraj** | - | Trustee |
| **Mr. G.S.Jebez Augustine** | - | Trustee |


**Invitees**

**Mrs. Vahitha Devadass**
**Mr. Winston Balasingh**
**Mrs. Selvi Pandian**
**Dr. Prema Christopher**
**Mr. Gladson Titus**
**Mr. Prem Kumar**
**Mrs. Ranjani Prem Kumar**

## ஷாலோம் ஊழியத்திற்கான உங்கள் பங்கினை இந்த வருடம் அனுப்பிவிட்டீர்களா?

**கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!**

உங்கள் கரங்களில் கிடைக்கும் அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் ஆத்துமப் பாரத்துடன் வட இந்தியாவில் தேவன் தந்த தரிசனப் பணியான மிஷனெரிப் பணித்தளச் செய்திகளையும், தேவனுடைய வார்த்தைகளையும், ஜீவனுள்ள சாட்சிகளையும், மிஷனெரி வாழ்க்கை வரலாறுகளையும் மற்றும் ஆவியானவரால் கொடுக்கப்படும் காரியங்களையும் சுமந்து வருகிறது. இம்மலருக்காக அதிகமாக ஜெபித்து, உழைத்து, அநேகச் செலவுகளைச் செய்து அனுப்புகிறோம்.




இந்த தரிசனப்பணியை, தேவன் பேரில் கொண்ட அன்பின் நிமித்தமாக, தியாகத்துடனும், ஆத்துமப் பாரத்துடனும் மாதந்தோறும் / வருடந்தோறும் தாங்கி வரும் ஆதரவாளர்களுக்காகத் தேவனைத் துதிக்கிறேன். இப்படி ஜெபித்து, ஊழியங்களைத் தாங்கிவரும் ஆதரவாளர்கள் மாதந்தோறும் ஊழியங்களை அறிந்து தேவனைத் துதிக்கவும், மேலும் பாரத்துடன் ஜெபிக்கவும் இம்மலர் அனுப்பப்படுகிறது. ஆனால் அநேகர் இந்த ஊழியத்திற்காகவோ, இந்த பத்திரிகைகளுக்காகவோ வருடத்திற்கு ஒரு முறை கூட காணிக்கை அனுப்பவில்லை.

பீல் ஆதிவாசி மக்களின் மத்தியில் நடைபெறும் மிஷனெரி ஊழியங்களுக்காக செலவு செய்யப்படும் இப்பணிக்காக, இம்மலரை வாசிக்கும் அன்பர்கள் **இந்த வருடத்தில் ஒரு முறை கூட காணிக்கை அனுப்பவில்லையெனில், தயவாக உங்கள் அன்பின் பங்கினை ஜெபித்து அனுப்பி, ஊழியங்களைத் தாங்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அல்லது குறைந்தது பத்திரிகை வருடச்சந்தா காணிக்கையான ரூ. 100/– ஐ அனுப்ப வேண்டுகிறோம்.**

மேலும் அரசாங்கத்திலிருந்து பத்திரிகை இலவசமாக கொடுக்கமுடியாதபடி பத்திரிகையின் வரவு செலவுகளை ஒப்படைக்கும்படி கேட்டிருப்பதால் நாம் இதனை இலவசமாக அனுப்ப இயலாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அப்படியாக நீங்கள் வருடத்திற்கு ஒருமுறை, குறிப்பாக இந்த மே மாதத்திற்குள்ளாக காணிக்கை அனுப்பும்படி அன்புடன் கேட்கிறோம். **“அப்படி நீங்கள் காணிக்கை அனுப்பாத பட்சத்தில், நிதி நெருக்கடியின் காரணத்தினால் எங்களால் தங்களுக்கு பத்திரிகை அனுப்ப இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்”.**

**நீங்கள் அனுப்பும் தியாகமான காணிக்கையை நாங்கள் வரவேற்கிறோம், உங்கள் குடும்பத்தையும், சந்ததியையும் தொடர்ந்து தேவன் ஆசீர்வதிப்பாராக**

**– பேராயர். வே. தேவதாஸ்**

## பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்!

### குஜராத் மாநிலம்

**Pr. மகன் சிலாட்** **பம்மேலா**

அனித்தா என்ற சகோதரி அசுத்த ஆவியினால் அலைக்கழிக்கப்பட்டு வந்தார். இவரை ஷாலோம் சபைக்கு அழைத்து வந்து இவருக்காக ஜெபித்தபோது தேவன் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுதலை கொடுத்தார்.

**Pr. மங்கல்சிங் வகோனியா** **நன்டேலாவ்**

பிரகாஷ்பாய் என்ற சகோதரர் டி.பி. வியாதியினால் பாதிக்கப்பட்டிருந்தார். எவ்வளவோ மருத்துவம் பார்த்தும் குணமாகவில்லை. இறுதியாக இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. கல்சிங் ரானா** **காட்டா**

கமிலா என்ற சகோதரியின் வயிற்றில் கட்டி இருந்தது. எவ்வளவோ மருத்துவம் மற்றும் மந்திரம் செய்தும் பலனில்லை. இறுதியாக ஜெபிக்கும்படியாக ஷாலோம் சபைக்கு அழைத்து வந்தனர். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புதமாக கட்டியை மறையச் செய்து சுகத்தைக் கொடுத்தார்.

ஜீவா என்ற சகோதரி நெஞ்சு வலியினால் மிகவும் கஷ்டப்பட்டு வந்தார். இவருக்காக பாரத்துடன் ஜெபித்தபோது, ஜெபத்தைக் கேட்டு தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

ஷர்மிளா என்ற சகோதரியின் காலில் தேள் கடித்துவிட்டது. இந்த சகோதரிக்காக ஜெபித்தபோது தேவன் விஷம் ஏறாமல் தடை செய்து சகோதரியின் ஜீவனைப் பாதுகாத்தார்.

**Pr. காட்டு டாமோர்** **குப்பாடா**

பாரி என்ற சகோதரியின் சரீரத்தில் ஊறல் வியாதி இருந்தது. அநேக மருத்துவம் பார்த்தும் குணமாகவில்லை. இறுதியாக இயேசுவின் நாமத்தில் ஜெபித்தபோது, இயேசு அற்புத சுகம் கொடுத்தார்.

**Pr. மதூர் கனவா** **கோலானா**

தல்லாபாய் என்ற சகோதரன் அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இவரை ஜெபிக்கும்படியாக ஷாலோம் சபைக்கு அழைத்து வந்தனர். இவருக்காக ஜெபித்தபோது, தேவன் ஜெபத்தைக் கேட்டு அசுத்த ஆவியின் பிடியிலிருந்து அற்புத விடுதலை கொடுத்தார்.

**Pr. பர்வத் ரத்தோடு** **களியாவட்**

சத்தரியாபாய் என்ற சகோதரன் 3 நாட்களாக சாப்பிட முடியாமலும், தண்ணீர் குடிக்க முடியாமலும் வியாதிப்பட்டிருந்தார். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் வியாதியை நீக்கி சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. காட்டு டாமோர்** **குப்பாடா**

பாரி என்ற சகோதரியின் சரீரத்தில் ஊறல் வியாதி இருந்தது. அநேக மருத்துவம் பார்த்தும் குணமாகவில்லை. இறுதியாக இயேசுவின் நாமத்தில் ஜெபித்தபோது, இயேசு அற்புத சுகம் கொடுத்தார்.

**Pr. வில்சன் சங்காடா** **நகரேலா**

லீலா என்ற சகோதரி 6 மாதமாக அசுத்த ஆவியின் பிடியினால் பாதிக்கப்பட்டு கை வலியினால் மிகவும் கஷ்டப்பட்டார். இவரை ஷாலோம் சபைக்கு அழைத்து வந்தார்கள். இவருக்காக ஜெபித்தபோது தேவன் அற்புத விடுதலையைக் கொடுத்தார்.

## பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்!

### இராஜஸ்தான் மாநிலம்

**Pr. நகடியா கர்வால் ஒஸ்கா**

பூரிபேன் என்ற சகோதரி 2 ஆண்டுகளாக அசுத்த ஆவியின் பிடியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இவரை ஷாலோம் சபைக்கு அழைத்து வந்தார்கள். இவருக்காக ஜெபித்தபோது தேவன் அற்புத விடுதலை கொடுத்தார்.

**Pr. ரமேஷ் கட்டாரா தும்பட் பாடி**

கானு என்ற சகோதரியின் பிள்ளை தீடீரென சுகவீனமடைந்தது. மருத்துவமனைக்குக் கொண்டு சென்றும் முன்னேற்றமில்லை. இறுதியாக ஷாலோம் சபையார் அனைவரும் இணைந்து ஜெபித்தார்கள். ஜெபத்தைக் கேட்டு தேவன் பிள்ளைக்கு நல்ல சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. சுரேஷ் பாரியா பாவ்காகூட்டா**

கீமா என்ற சகோதரி 8 மாதமாக தலைவலியினால் மிகவும் கஷ்டப்பட்டுவந்தார். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் தலைவலியை நீக்கி சுகம் கொடுத்தார்.

**Pr. லால்சிங் நினாமா சக்கர்வாடா**

கிருபா என்ற சகோதரி டைபாய்டு காய்ச்சலினால் மிகவும் கஷ்டப்பட்டார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் அற்புத சுகம் கொடுத்தார்.

காந்தி என்ற சகோதரி வயிற்றில் ஏற்பட்ட கட்டியினால் மிகவும் வேதனைப்பட்டார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் கட்டியை மறையச் செய்து சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. ஹூரலால் பகோரா காளாகூட்**

ரம்லா என்ற சகோதரி ஒரு வருடமாக அசுத்த ஆவியினால் அலைக்கழிக்கப்பட்டார். இவரை ஷாலோம் சபைக்கு அழைத்து வந்தார்கள். இவருக்காக ஜெபித்தபோது தேவன் பரிபூரண விடுதலையைக் கொடுத்தார்.

காளியா பாய் என்ற சகோதரன் நடக்க முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டார். இவருக்கு இயேசு கிறிஸ்துவைக் குறித்து சுவிசேஷம் அறிவித்து ஜெபித்தபோது, தேவன் கால்களில் நல்ல பெலனைக் கொடுத்து நடக்கும்படி கிருபை செய்தார்.

**Pr. காந்திலால் கராசியா பிலோடி**

வர்ஜீ என்ற சகோதரியை பாம்பு கடித்துவிட்டது. இந்த சகோதரிக்காக பாரத்துடன் ஜெபித்தபோது, விஷம் ஏறாமல் தேவன் ஜீவனைப் பாதுகாத்தார்.

**Pr. ஹூக்குலா டின்டோர் ஜோகோடியாநாதா**

பாதாபாய் என்ற சகோதரன் பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். அநேக மருத்துவம் பார்த்தும் பலனில்லை. இறுதியாக ஜெபிக்கும்படியாக சபைக்கு வந்து, பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் ஜெபத்தைக் கேட்டு நோயை நீக்கினார்.

**Pr. புரா டாமோர் சேயாசாத்**

நாட்டி என்ற சகோதரிக்கு வயிற்றில் கட்டி இருந்தது. மருத்துவம் மற்றும் மந்திரம் செய்தும் பலனில்லாமல் மிகவும் கஷ்டப்பட்டார். இறுதியாக ஜெபிக்கும்படியாக ஷாலோம் சபைக்கு அழைத்து வந்தார்கள். இந்த சகோதரிக்காக ஜெபித்தபோது தேவன் அற்புதமாக கட்டியை கரையச் செய்து சுகத்தைக் கொடுத்தார்.

## பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்!

### மத்தியப்பிரதேசம் மாநிலம்

**Pr. ராமு டாமோர் கோபால்புரா**

கசன்பாய் என்ற சகோதரன் டைபாய்டு காய்ச்சலினால் மிகவும் கஷ்டப்பட்டு வந்தார். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் வியாதியை நீக்கி சுகம் கொடுத்தார்.

**Pr. நார்சிங் கல்லாரா காளியாவிரன்**

நுராபாய் என்ற சகோதரன் அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இவரை ஷாலோம் சபைக்கு அழைத்துச் சென்று இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. பிரகாஷ் டாமோர் சஜேலி - 4**

மன்னுபாய் என்ற சகோதரன் 2 வருடமாக வயிறு வலியினால் பாதிக்கப்பட்டிருந்தார். இயேசுவை விசுவாசித்து பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. டிடியா வானியா அமளிபாட்டர்**

தீப்பு என்ற சகோதரியை தேள் கடித்துவிட்டது. இந்த சகோதரிக்காக ஜெபித்தபோது தேவன் விஷம் ஏறாமல் ஜீவனைப் பாதுகாத்தார்.

**Pr. ராம்சு புரியா கச்சல்தாரா**

லீலா என்ற சகோதரியின் குடும்பம் 8 வருடமாக அசுத்த ஆவியின் பிடியில் சிக்கி கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தது. மருத்துவம் மற்றும் மந்திரம் செய்தும் பலனில்லாமல் இறுதியாக சபைக்கு வந்து ஜெபித்தபோது தேவன் முழு குடும்பத்தையும் அசுத்த ஆவியின் கட்டிலிருந்து விடுவித்தார்.

**Pr. திலீப்சிங் வாசுனியா ஜாமுகேடா**

கவ்லி என்ற சகோதரி 7 வருடமாக நடக்க முடியாமல் கஷ்டப்பட்டார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் நல்ல பெலனைக் கொடுத்து நடக்க கிருபை செய்தார்.

**Pr. மன்சிங் டாமோர் மாண்ட்லி**

லலிதா என்ற சகோதரியின் இடுப்பில் இருந்த எரிச்சலினாலும் அசுத்த ஆவியின் கட்டினாலும் மிகவும் கஷ்டப்பட்டு வந்தார். இவரை ஷாலோம் சபைக்கு அழைத்து வந்தார்கள். இவருக்காக சபையார் அனைவரும் இணைந்து ஜெபித்தபோது தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார்.

**Pr. தும்லா காட் வால்பூர்**

ராய்லிபாய் என்ற சகோதரனின் குடும்பம் மந்திரம் மற்றும் பில்லிசூனியத்திற்கு அடிமையாக இருந்தது. மேலும் இவரது மனைவி உதிரப்போக்கினால் மிகவும் கஷ்டப்பட்டு வந்தார். இவரை ஷாலோம் சபைக்கு அழைத்து வந்தார்கள். இவருக்காக ஜெபித்தபோது தேவன் கட்டுகளை உடைத்து, முழுக் குடும்பத்தையும் வியாதியிலிருந்து பாதுகாத்தார்.

**Pr. ராமு டாமோர் கோபால்புரா**

காந்தாபேன் என்ற சகோதரி 7 வருடமாக குழந்தை பாக்கியத்திற்காக ஜெபித்துக் கொண்டிருந்தார். தேவன் இவர்களுக்கு குழந்தை பாக்கியத்தைக் கட்டளையிட்டு ஆசீர்வதித்தார்.



# ஷாலோம் - வேத வினாப் போட்டி 24

**பதில் எழுதுக :**

1. நோ அம்மோனுக்கு மதிலாயிருந்தது எது?
2. ஏழு நாள் விருந்து நடத்திய ராஜா யார்?
3. மேன்மைக்கு முன்னானது எது?
4. யோவாஸ் ராஜாவின் தாயின் பெயர் என்ன?
5. பெத்தேல் என்றால் என்ன?
6. "பேரின்ப நதியைக்" குறித்து எங்கே வாசிக்கிறோம்.
7. பவுல் சொல்லும் பெரிய இரகசியம் யாரைப் பற்றியது?
8. பொருளாசைக்காரனுக்கு மறுபெயர் என்ன?
9. நம்முடைய குடியிருப்பு எங்கே இருக்கிறது?
10. யோனத்தான் தவழ்ந்து ஏறிய செங்குத்தான பாறைகளின் பெயர் என்ன?

**வேதவினாப் போட்டியில் பங்கு பெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள் :**

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. கேள்வி எண்ணைக் குறிப்பிட்டு பதில்களை மட்டும் எழுதினால் போதும்.
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **17.07.2015**

**கடந்த மே மாத வேத வினா போட்டி எண் 23க்கான சரியான விடைகள் :**

1. கண்ணீரோடு விதைக்கிறவர்கள். சங். 126:5
2. யாக்கோபு 5 : 15
3. இயேசு லூக்கா 3 : 21
4. கர்த்தருக்கு விரோதமாய் பாவம் செய்கிறவன். – நீதி. 8 : 36
5. ஆசகேல். – 2 இராஜா. 8 : 13
6. பெனாயா. – 2 சாமு 23 : 20
7. துன்மார்க்கர். – ஏசாயா 57 : 20
8. ஏமான். – 1 நாளா. 25 : 4
9. யோசபாத் – 1 இராஜா. 22 : 48 (or) சாலொமோன் 1 இராஜா. 9 : 26
10. பொய்யான மாயையைப் பற்றிக் கொள்ளுகிறவர்கள். யோனா – 2 : 8

**கடந்த மே மாத வேத வினாப் போட்டி எண் 23 இல் சரியான விடையினைத் தகுந்த நேரத்திற்குள் எழுதி அனுப்பிய 14 நபர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்.**

1. Bro. செல்வராஜ் சாலமோன், வள்ளியூர். 2. Sis. மைதிலி சலோமி லாரன்ஸ், சென்னை.
3. Sis. மேபெல் சாமுவேல், சென்னை

**பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி**


**SHARING LOVE MISSION**

New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, Cell : 9345675468

# தேவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்



**பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிப்பிற்காக**

கர்த்தர் தரிசனமாகக் கொடுத்த குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் உள்ள 1 கோடி பீல் ஆதிவாசி மக்களும் இயேசுவை அறிந்துக் கொண்டு அவரை ஏற்றுக் கொண்டு அங்குள்ள மந்திரவாதிகள், கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள், பலவிதமான பாவ, சாபங்களிலும் உள்ள மக்கள் இரட்சிக்கப்பட்டு இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்று சாட்சியாக வாழவும் ஜெபியுங்கள்.

**புதிய கல்வியாண்டு :**

1. நம்முடைய பீல் ஆதிவாசி மக்களுடைய பிள்ளைகள் 10th, +2 தேர்வுகள் எழுதியிருக்கிறார்கள் அவர்கள் நல்ல மதிப்பெண்கள் எடுத்து தேர்ச்சி பெற வேண்டும் என்று அவர்களுக்காக கர்த்தரிடம் ஊக்கமாய் ஜெபியுங்கள்.
2. பிள்ளைகள் உயர்கல்வி என்ன கற்கவேண்டும் என்று கர்த்தர் சித்தம் வைத்திருக்கிறாரோ அந்தத் திட்டங்கள் நிறைவேறி அவர்கள் சிறப்பாக படித்து முன்னேறும்படியாக ஜெபியுங்கள்.
3. இந்த பீல் மக்கள் பிள்ளைகளுக்கு உயர்கல்வி மற்றும் புதிய கல்வியாண்டில் அடியெடுத்து வைக்கும் பிள்ளைகளுக்குத் தேவையான அனைத்து பொருளாதாரத் தேவைகளும் சந்திக்கப்படும்படியாகவும், அவர்கள் விரும்புகிற உயர்கல்வி அவர்களுக்கு கிடைக்கும்படியாகவும், படிக்கின்ற அனைத்து பிள்ளைகளுடைய தேவைகளும் சந்திக்கப்படும்படி ஜெபியுங்கள்.

**பேராயர் தேவதாஸ் அவர்கள் குடும்ப நலனுக்காக**

பிஷப் தேவதாஸ், சகோதரி. வஹிதா தேவதாஸ், பிள்ளைகள் டைட்டஸ் – மெர்லின், ஷாலோம், ஷெக்கினா, Zion Kryston, இவர்களுக்காக ஜெபியுங்கள். இவர்கள் அனைவருக்கும் தேவன் தாமே நல்ல சுகம், பெலன், ஆரோக்கியத்தையும், நல்ல பாதுகாப்பையும் கொடுக்கும்படியாகவும், ஊழியத்திற்கு இவர்கள் செல்கின்ற இடங்களில் எல்லாம் தேவன் இவர்களை வல்லமையாக பயன்படுத்தும்படியாகவும் இவர்களுக்காக பாரத்தோடு ஜெபியுங்கள்.

**ஷாலோம் ஊழியத்தின் வெள்ளி விழா ஆண்டு**

ஜுலை 1–ம் தேதி நம் ஷாலோம் ஊழியம் 25 ம் ஆண்டுக்குள் அடியெடுத்து வைக்கப்போகிறோம். தேவன் தாமே இம்மட்டும் நம் ஊழியத்தை ஆசீர்வதித்து பெருகச் செய்திருக்கிறார். இந்த 25ம் ஆண்டை தேவன் இன்னும் அதிகமாக எல்லாக் காரியத்திலும் பெருகச் செய்ய வேண்டும், நம் ஊழியத்தில் தேவன் பெரிய காரியங்களையும், அற்புத அடையாளங்களையும் செய்யும்படியாகவும், ஷாலோம் ஊழியத்தின் தலைவராக தேவன் தாமே இருந்து வழிநடத்தும்படியாகவும் ஜெபியுங்கள்.

**பணித்தள பீல் மக்கள்**

10 இலட்சம் ஆத்துமாக்கள், 1000 சுதேச ஊழியர்கள், 1000 சபைகள் இந்த வருடத்திற்குள்ளாக எழும்பவும், இதை கர்த்தர் ஆசீர்வதித்து நடத்தித் தரவும் நாம் கருத்தாய் ஜெபிப்போம்.

**ஆதரவாளர்கள் குடும்பங்களுக்காக**

நம் ஷாலோம் ஊழியத்தைத் தாங்கி வரும் நம்முடைய ஆதரவாளர்கள் குடும்பங்கள் ஒவ்வொன்றையும் தேவன் தாமே ஆசீர்வதிக்கும்படியாகவும், தங்களுடைய வறுமையினால் நம் ஊழியத்துக்கு கொடுத்து வந்து தற்போது கொடுக்க முடியாமல் இருக்கும் ஆதரவாளர்களுடைய குடும்பங்களுக்காக விசேஷமாக ஜெபித்து அவர்கள் வறுமை நிலை மாறி அவர்கள் குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்படவும், அதன் மூலம் நம் ஊழியத்தை அவர்கள் சந்தோஷமாக நன்றியோடு தாங்கவும் நாம் கருத்தாய் ஜெபிப்போம்.

**தலைமை அலுவலகம், பணித்தள அலுவலகம், கிளை அலுவலகங்களுக்காக**

நம் ஊழியத்தில் பணியாற்றும் தலைமை அலுவலக ஊழியர்கள் மற்றும் பணித்தள ஊழியர்கள், கிளை அலுவலகங்களில் உள்ள ஊழியர்கள் அனைவரும் இவ்வூழியத்தை உண்மையோடும், உத்தமத்தோடும் செய்யும்படியாகவும், இவர்கள் குடும்பங்களை தேவன் ஆசீர்வதிக்கும்படியாகவும், இவர்கள் பிள்ளைகளையும் கர்த்தர் ஆசீர்வதித்து பெருகச் செய்யும்படியாகவும் நாம் கருத்தோடு ஜெபிப்போம்.

**ஊழியங்களுக்காக ஜெபிப்போரும், தாங்குவோரும் எழுப்பப்பட**

நம் ஷாலோம் ஊழியத்திற்காக ஒவ்வொரு நாளும் கருத்தோடு ஜெபிக்க ஜெபப் பங்காளர்கள் தேவை. தேவன் தந்த தரிசனத் திட்டமான ஒரு கோடி பீல் ஆதிவாசி மக்களின் இரட்சிப்பின் பணியில் நடைபெறும் இந்த மாபெரும் ஊழியத்தினை ஜெபத்தில் தாங்கக் கூடிய ஜெபப் பங்காளர்களை ஒவ்வொரு மாநிலத்திலும், மாவட்டங்களிலும் எழுப்பவும், இந்த மாபெரும் திட்டப்பணியின் தேவைகள் சந்திக்கப்பட அநேக ஆதரவாளர்கள் மற்றும் ஊழிய பிரதிநிதிகள், தன்னார்வத் தொண்டர்கள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் சேரிட்டி மிஷனின் வளர்ச்சிக்காக**

ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலம் தாங்கப்படும் ஹாஸ்டல் பிள்ளைகள், பிஜல்பூர் பள்ளி மாணவர்கள், வீட்டிலிருந்து கல்வி பயின்று வரும் பிள்ளைகள், பராமரிக்கப்படும் பிள்ளைகள் யாவருக்கும் தேவன் நல்ல ஞானத்தையும், பாதுகாவலையும், சுகத்தையும் கொடுத்து இந்த பிள்ளைகளுக்கு ஆதரவாளர்கள் கிடைக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

**ஓர் முக்கிய அறிவிப்பு**

பிரியமானவர்களே, இந்த ஜுலை மாத இதழை வெள்ளிவிழா ஆண்டு சிறப்பு ஆயத்த மலராக வெளியிட எண்ணியிருந்தோம். கால தாமதத்தின் காரணமாக வெளியிட இயலவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் கர்த்தருக்குச் சித்தமானால் அடுத்த ஆகஸ்ட் மாத இதழை **“வெள்ளி விழா ஆண்டு சிறப்பு ஆயத்த மலராக”** வெளியிடுகிறோம்.

## ஷாலோம் கிளை அலுவலகங்களின் முகவரிகள்

**HEAD OFFICE**

**M/S. SHARING LOVE MISSION,**

New No. 5A/323, Old No. 5/168,-3rd Street, Caldwell Colony,
TUTICORIN-628008 Ph. : 2377737, 2375468, Cell : 9345675468

**CHENNAI BRANCH OFFICE**

**Bro. John Jeyasingh**
No.102-2nd Main Road
Sathya Nagar, Padi,
CHENNAI - 600050.
Cell : 9698244577

**MARTHANDAM BRANCH OFFICE**

**Bro. Selvadurai.G**
Bethel,
25-7/A 1-Block 25, Paruthivilai,
Kannakode, Marthandam - 629165
Cell : 9487689869

**MUMBAI BRANCH OFFICE**

**Bro. Prabhakaran. P.**
C/o. Mr. P.Immanuel,
C-2, Plot No.123-Old Mhada Colony,
Mangalya Co.Op.Society Ltd,
Pokharan Road No.2,
Thane West - 400610
Cell : 9768282699

**NAGERCOIL BRANCH OFFICE**

SHARING LOVE MISSION Branch
Ebenezer Plaza, Parama Street,
WCC Junction,
Nagercoil - 629001
Cell : 9698444522

**MADURAI BRANCH OFFICE**

**Bro. Chandra Paul. S**
6/3, Nellaiappar Puram 7th Street,
Tirunagar (p.o)
MADURAI-625006
Cell : 9698644522

**TIRUNELVELI BRANCH OFFICE**

**Bro. David. R**
56 A/4,-C.S.I Church South Street,
(Upstairs) STC road,
Perumalpuram, Palayamkottai
TIRUNELVELI-627007
Cell 9698844599

**குழந்தை ஆதரவுத் தொகை மற்றும்**
**சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப...**

வங்கிக் கணக்கின் பெயர் : **SHALOM CHARITY MISSION**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**TMB**
**Tamilnad Mercantile Bank**

**174100710400061**
**Branch : Tiruchendur Road**
(IFS Code : TMBL0000174)

**AXIS BANK**

**105010100096779 -**
(IFS Code : UTIB0000105)

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- ❖ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்துக் கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ காணிக்கைகளை **E.M.O.** மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அப்படி அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியைக் கொடுக்கும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- ❖ **SHARING LOVE MISSION** என்ற பெயருக்கு **D.D.** அல்லது **Cheque** எடுத்து தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு பதிவுத் தபால் அல்லது கொரியர் மூலமாக உங்கள் காணிக்கைகளை அனுப்பலாம்.
- ❖ உங்களது வங்கிக் கணக்கிலிருந்து, **Net Transfer** மூலமாகவும் காணிக்கைகளை கீழ்க்கண்ட எங்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பலாம்.
- ❖ நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க்கண்ட வங்கிகளில் எங்கள் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலம் **Deposit** பண்ணலாம்.
- ❖ எங்களது ஷாலோம் கிளை அலுவலகங்களுக்கு நேரடியாக வந்தும் காணிக்கைகளைக் கொடுத்து ஜெபித்துச் செல்லலாம்.

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**
Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

AXIS BANK
**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

ICICI Bank
**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலமாகவோ அல்லது **Net Transfer** மூலமாகவோ காணிக்கை செலுத்தினால், உடனடியாக அந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள். தொடர்புக்கு : 9698244522

## நாட்டு நடப்புச் செய்திகள்

தென்கொரியாவில் மெர்ஸ் சுவாசத் தொற்று நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 23ஆக உயர்ந்துள்ளது. இந் நாட்டில் ஒரு மாதத்திற்கு முன்னாள் இந்த மெர்ஸ் நோய் பரவியது. இதுவரை 160க்கும் அதிகமானோருக்கு இந்த கிருமி தொற்று ஏற்பட்டுள்ளது. மேலும் இந்த மாத இறுதிக்குள் இந்த நோய் புதிதாகப் பரவுவது கட்டுப்படுத்தப்படும் என்று அந் நாட்டின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் உள்ள ஒரு ஆப்பிரிக்க தேவாலயத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் 9 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதில் அந்த தேவாலயத்தின் போதகர் கிளமெண்டா பிங்க்னியும் கொல்லப்பட்டிருக்கலாம். இந்த தாக்குதலின் காரணம் முழுமையாகத் தெரியவில்லை என காவல் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த இம்மானுவேல் தேவாலயம் அமெரிக்காவில் மிகப் பழமை வாய்ந்த ஆப்பிரிக்க தேவாலயமாகும்.

உத்திரப்பிரதேசம் மாநிலத்தில் பிரதாப்கர் மாவட்டத்தில் உள்ள ஒரு ஓட்டலில் தீ விபத்து ஏற்பட்டது. அதிகாலையில் ஏற்பட்ட இந்த விபத்தில் தீ மள மளவென ஓட்டலின் அனைத்து இடங்களுக்கும் பரவியது. இந்த விபத்தில் அந்த ஓட்டலில் தங்கியிருந்த 10பேர் மரணமடைந்தனர். 13பேர் பலத்த காயமடைந்துள்ளனர். மின் கசிவு காரணமாக இந்தத் தீ விபத்து ஏற்பட்டதாக தெரிய வருகிறது.

கடந்த ஆண்டு வால் நட்சத்திரம் ஒன்றின் மீது இறங்கிய முதலாவது ஆய்வுக்கலனான ஃபைலே ஒரு மாதகால உறக்கத்திற்குப் பின்னர் இப்போது மீண்டும் பூமியுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. சூரியனுக்கு அருகில் சென்றதும் இதன் சோலார் தகடுகள் சக்தியை உருவாக்கத் தொடங்கியவுடன் ஃபைலே விழித்துக் கொண்டது. இது நல்ல முறையில் இயங்குவதாகவும் அடுத்த நடவடிக்கையைத் தொடங்கத் தயாராக உள்ளதாகவும் ஐரோப்பாவின் விண்வெளி ஆய்வு மையம் கூறுகிறது. வால் நட்சத்திரத்தில் உள்ள பனித் திட்டுக்கள் மற்றும் பாறைகளை ஆராய்வதற்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.


**கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, 2377737
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat
Ph. : 07043334501
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

## ஜூலை-8ல் திருமண நாளைக் காணும்
## பேராயர் தேவதாஸ் - சகோதரி வஹிதா தேவதாஸ் தம்பதியரை
## வாழ்த்துகிறோம்



ஜூலை 8 ஆம் தேதி தங்களது இல்லறவாழ்வில் 30 வருடங்களை நிறைவு செய்து 31 வது ஆண்டிற்குள் அடியெடுத்து வைக்கும் பேராயர் தேவதாஸ் – சகோதரி வஹிதா தேவதாஸ் தம்பதியரை ஷாலோம் ஊழியத்தின் சார்பில் அனைவருமாக இணைந்து உளமாற வாழ்த்தி மகிழ்கிறோம். கர்த்தர்தாமே பல்லாண்டுகள் அவர்களுக்கு நல்ல சுகம் பெலன் தந்து, இல்லற வாழ்க்கையையும் சந்ததியையும் ஆசீர்வதித்து பீல் மக்கள் மத்தியில் தேவ இராஜ்ஜியத்தைக் கட்டவும், பாரத தேசத்திற்கு ஆசீர்வாதமாக அமையவும் அருள்புரிவாராக.

**SHARING LOVE MISSION**
Missionary Seva

**Shalom Charity Mission**
Socio Economic Development Service

**Shalom Diocese in India**
Church Network

## பீல் சுதேச ஊழியர் பிரதிஷ்டை - 17.05.2015 - முள்ளன்விளை



பிரதிஷ்டை செய்யப்படும் ஊழியர் சகோ. தினேஷ் சிங்காடா அவர்கள்



சபை போதகர் & சபை ஊழியருடன்

## ஷாலோம் பங்காளர் கூடுகை - 30.05.2015 - நாகர்கோவில்



பணித்தள செய்தி சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள்



கூடியிருந்த தேவ ஜனங்களில் ஒரு பகுதியினர்

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

## BLESS A CHILD PROJECT



| | | |
|---|---|---|
| மாணவியின் பெயர் | : | **பியூலா M. புரியா** |
| தந்தையின் பெயர் | : | மக்கன்சிங் புரியா |
| தாயாரின் பெயர் | : | சிமானி புரியா |
| பிறந்த நாள் | : | 19.08.2007 |
| படிக்கும் வகுப்பு | : | 2nd Std. |
| சொந்த ஊர் | : | தெமேரா |
| மாவட்டம் & மாநிலம் | : | ஜாபுவா, மத்தியப்பிரதேசம் |

**மாணவியின் பெற்றோரைப் பற்றிய சில வரிகள்:–** இவளுடைய தகப்பனார் இயேசுவை அறியாததற்கு முன்பு பில்லிசூனியத்தினால் பாதிக்கப்பட்டு, சரீரத்தில் மிகவும் பலவீனமடைந்தார். இவரது பெரியப்பா சகோ. தேவ்சந்த் மெய்டா ஷாலோம் ஊழியத்தின் மூலம் இயேசுவை அறிந்த விசுவாசி. இவர் சகோ. மக்கன்சிங் அவர்களுக்கு இயேசுவை பற்றிக் கூறி, ஹிமாலா கிராமத்தில் நடைபெற்ற இரவு கூட்டத்திற்கு அழைத்து சென்றார். அங்கு ஊழியர் இவருக்காக ஜெபித்த போது, இவர் பூரண விடுதலையை பெற்று, விசுவாசியானார். பின்பு இவரை தேவன் ஊழியத்திற்கென்று அழைக்கவே 2006–ம் வருடம் ஷாலோம் ஊழியத்தில் இணைந்து பயிற்சி பெற்று, தெமேரா கிராமத்தில் ஊழியம் செய்ய ஆரம்பித்தார். தற்போது இவரது ஊழியத்தின் மூலம் 35 குடும்பங்கள் கிராமத்தில் இயேசுவை ஏற்றுக் கொண்டு ஆராதிக்கிறார்கள்.

**மாணவியைக் குறித்து :–** பியூலா நன்றாக படிப்பாள். கோ–கோ விளையாடுவது இவளுக்கு மிகவும் பிடிக்கும். இவளுக்கு 3 சகோதரர்கள் உண்டு.

**ஜெபியுங்கள் :–** இவளுக்காக, இவளுடைய படிப்பிற்காக, நல்ல சரீர சுகத்திற்காக, பெற்றோர் செய்கிற ஊழியத்திற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

மாணவியைத் தாங்குபவர் :– **Mr. Chris Varghees, Chennai.**

### ஜெபித்துத் தாங்க முன்வாருங்கள்

பிரியமானவர்களே! நீங்களும் ஜெபித்து மாதம் ரூ. 700/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வரலாம். நாம் பராமரித்து வரும் 1195 மாணவர்களில் இன்னும் 206 **மாணவ மாணவியர்களுக்கு ஆதரவாளர்கள் தேவைப்படுகிறார்கள்.**

***Shalom Charity Mission*** என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை D.D. அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக தயவாய் அறிமுகப்படுத்திவையுங்கள்.